

Saidai Duraisamy's
**Manidhanaeyam Free IAS Academy**
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

**வினாத்தொகுப்பு எண்:**

**பதிவு எண்:**

## TNPSC - தொகுதி - IV & VAO தேர்வு - இணைய வழி தொடர் மாதிரி தேர்வு
## இந்த வினாப்புத்தகம்
## பகுதி-அ (பொதுத் தமிழ்) உள்ளடக்கியது

**கால அளவு: ஒரு மணி நேரம் முப்பது நிமிடம்** **மொத்த மதிப்பெண்கள்: 150**

வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

### முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, 100 வினாக்களைக் கொண்டுள்ளது.
3. விடையளிக்கத் தொடங்கும் முன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் பெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினா தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
4. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
5. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
6. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால். உங்களுக்கு வழங்கப்படும். <u>விடைகளை குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.</u>
7. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் <u>கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால்</u> குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்க தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
8. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். உங்களுக்கு விடை தெரியவில்லை, எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும். எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடைதான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
9. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
10. குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கு வினா தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.
11. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்ற தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

[Turn over]



Saidai Duraisamy's
**Manidhanaeyam Free IAS Academy**
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
**Website: www.mntfreeias.com**

| Question Booklet No: |
|---|
| |

**Register Number:** | | | | | | | | | | |

## TNPSC - Group - IV & VAO Exam - Online Test Series
## This Booklet Contains
## Part-A (Tamil Eligibility-Cum-Scoring Test)

**Duration: One Hour Thirty Minutes** **Total Marks : 150**

**Read the following instructions carefully before you begin to answer the questions**

## IMPORTANT INSTRUCTIONS

1. You will be supplied with this question booklet 15 minutes prior to the commencement of the examination.
2. This Question Booklet contains 100 questions.
3. Before answering the questions, you .shall check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. If any defect is noticed in the question booklet, it shall be reported to the invigilator within the first 10 minutes. and get it· replaced with a complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.
4. Answer all the questions. All the questions carry equal marks.
5. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
6. An answer sheet will be supplied to you separately by the room invigilator to shade the answers. Instructions regarding filling of answers etc., which are to be followed mandatorily, are provided in the answer sheet and in the mem"oranduin of admission (Hall Ticket).
7. You shall write and shade your question booklet number in the space provided on page one of the answer sheet with BLACK INK BALL POINT PEN. If you do not shade correctly or fail to shade the question booklet number, your answer sheet will be invalidated.
8. Each question comprises of five responses (answers) : i.e. (A), (B), (C), (D) and (E). You have to select ONLY ONE correct answer from (A) or (B) or (C) or (D) and shade the same in your answer sheet. If you feel that there are more than one 90rrect answer, shade the one which you consider the best. If you do not know the answer, you have to mandatorily shade (E). In any case, choose ONLY ONE answer for each question. If you shade more than one answer for a question, it will be treated as a wrong answer even if one of the given answers happens to be correct.
9. You should not remove or tear off any sheet from this Question Booklet.You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Room during the time of examination. After the examination. you must hand over your Answer Sheet to the Invigilator. You are allowed to take the Question Booklet with you only after the Examination is over.
10. You should not make any marking in the question booklet except in the sheets before the last page of the question booklet, which can be used for rough work. This should be strictly adhered to.
11. Failure to comply with any of the above instructions will render you liable for such action as the Commission may decide at their discretion.

[Turn over]

## பகுதி-அ - பொது தமிழ்

## Part-A- General Tamil

## 10 ஆம் வகுப்பு – பாடம் – 1, 2, 3

வினாக்கள் : 1 - 100
Questions : 1 - 100

மொத்த மதிப்பெண்கள் : 150
Total Marks : 150

1. வேலொடு நின்றான் இடுவென்றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு' என்ற குறளில் பயின்று வரும் அணி எது?
(A) உவமையணி
(B) வேற்றுமை அணி
(C) உருவக அணி
(D) எடுத்துக்காட்டு உவமையணி
(E) விடை தெரியவில்லை

2. இரா. இளங்குமரனார் எழுதிய நூல்கள் எது?
(A) இலக்கண வரலாறு, பாவாணர் வரலாறு
(B) குண்டலகேசி உரை, யாப்பெருங்கலம் உரை
(C) தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம்
(D) மேற்கூறிய அனைத்தும்
(E) விடை தெரியவில்லை

3. பின்வருவனவற்றுள் முறையான தொடர் -----
(A) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு
(B) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு
(C) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு
(D) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு
(E) விடை தெரியவில்லை

4. கீழ்க்கண்ட கூற்றை கவனி
கூற்று 1 : தொகாநிலைத்தொடர் ஒன்பது வகைப்படும்.
கூற்று 2 : எழுவாயுடன் பெயர், வினை, வினா ஆகிய பயனிலைகள் தொடர்வது எழுவாய்த்தொடர் எனப்படும்.
(A) கூற்று 1 மற்றும் 2 சரி
(B) கூற்று 1 மற்றும் 2 தவறு
(C) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
(D) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
(E) விடை தெரியவில்லை

5. உரை(றை) ஊற்றி ஊற்றிப் பார்த்தாலும்
புளிக்காத பால் தந்தை தந்த தாய்ப்பால்
முப்பால்' என்ற கவிதையை இயற்றியவர்?
(A) குணசேகரன்
(B) அழகிரி
(C) மெய்யப்பன்
(D) அறிவுமதி
(E) விடை தெரியவில்லை

6. 'அன்பால் காட்டினார்' என்பது எவ்வகைத்தொடர்?
(A) மூன்றாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்
(B) இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்
(C) நான்காம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்
(D) ஏழாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்
(E) விடை தெரியவில்லை

7. மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது?
(A) வணிகக்கப்பலும் ஐம்பெரும் காப்பியம்
(B) பெரும் வணிகமும் பெரும் காப்பியங்களும்
(C) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
(D) வணிக கப்பல்களும் அணிகலன்களும்
(E) விடை தெரியவில்லை

8. கீழ்க்கண்ட கூற்றை கவனி
கூற்று 1 : மலைபடுகடாம் 583 பாடல் அடிகளைக் கொண்டுள்ளது.
கூற்று 2 : மலைபடுகடாம் கூத்தராற்றுப்படை எனவும் அழைக்கப்படுகிறது.
(A) கூற்று 1 மற்றும் 2 சரி
(B) கூற்று 1 மற்றும் 2 தவறு
(C) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
(D) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
(E) விடை தெரியவில்லை

9. தமிழ் சொல்வளம் என்னும் கட்டுரை எந்த நூலிலிருந்து எடுக்கப்பட்டது?
(A) பரிதிமாற்கலைஞரின் தமிழ்மொழியின் வரலாறு
(B) மறைமலையடிகளின் திருக்குறள் ஆராய்ச்சி
(C) தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வு கட்டுரை
(D) மீனாட்சி சுந்தரனாரின் தமிழும் பிறபண்பாடும்
(E) விடை தெரியவில்லை

10. 'பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்ககமும் வழிபடும் பண்பே' என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?
(A) சிறுபாணாற்றுப்படை
(B) நறுந்தொகை
(C) காசிக்காண்டம்
(D) வாயுசம்கிதை
(E) விடை தெரியவில்லை

11. கீழ்க்கண்ட கூற்றை கவனி
கூற்று 1 : திரு.வி.க போல் இமைகள் மூடியப்படி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர் இளங்குமரனார்.
கூற்று 2 : திருக்குறள் தமிழ் மரபுரை என்ற நூலை எழுதியவர் இளங்குமரனார்.
(A) கூற்று 1 மற்றும் 2 சரி
(B) கூற்று 1 மற்றும் 2 தவறு
(C) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
(D) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
(E) விடை தெரியவில்லை

12. கீழ்க்கண்ட கூற்றை கவனி
கூற்று 1 : திருவள்ளுர் விருந்தோம்பலை பாயிரவியல் என்ற அதிகாரத்தில் வலியுறுத்தியுள்ளார்.
கூற்று 2 : காலின் ஏழடிப் பின் சென்று' என்ற விருந்தோம்பல் பற்றிக் கூறும் நூல் பொருநராற்றுப்படை.
(A) கூற்று 1 மற்றும் 2 சரி
(B) கூற்று 1 மற்றும் 2 தவறு
(C) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
(D) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
(E) விடை தெரியவில்லை

13. 'திக்குகள் எட்டும் சிதறி – தக்கத்
தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட
தீம்தரிகிட' என்ற பாடலின் ஆசிரியர் யார்?
(A) பாரதியார்
(B) பாரதிதாசன்
(C) கண்ணதாசன்
(D) வாணிதாசன்
(E) விடை தெரியவில்லை

14. ‘நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
இரும்புடைப் பழவாள் வைத்தனன் இன்றுஇக்
கருங்கோட்டுச் சீறியாழ் பணையம்’
என்ற பாடல்வரி இடம்பெற்ற நூல் எது?
(A) நற்றிணை
(B) திருக்குறள்
(C) புறநானூறு
(D) மலைபடுகடாம்
(E) விடை தெரியவில்லை

15. கீழ்க்கண்ட கூற்றை கவனி
கூற்று 1 : முல்லை நிலத்தில் காணப்படும் நீர் சுனைநீர் ஆகும்
கூற்று 2 : முல்லை நிலத்திற்குரிய பெரும்பெழுது கார்க்காலம் ஆகும்.
(A) கூற்று 1 மற்றும் 2 சரி
(B) கூற்று 1 மற்றும் 2 தவறு
(C) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
(D) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
(E) விடை தெரியவில்லை

16. கோவலனைப் பிரிந்துவாழும் கண்ணகி அவனைப் பிரிந்ததைவிட விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணியே வருந்துவதாகக் குறிப்பிடுவதன் மூலம் விருந்தினரைப் போற்றிப் பேணல் பழந்தமிழர் மரபு என்பதை உணர்த்தியவர்?
(A) இளங்கோவடிகள்
(B) சாத்தனார்
(C) இளம்பெருவழுதி
(D) கழனியூரன்
(E) விடை தெரியவில்லை

17. புயல்களுக்கு பெயர் வைக்க 64 பெயர்களை பட்டியலிட்டுள்ள அமைப்பு எது?
(A) சென்னை வானிலை மண்டலக் சிறப்பு வானிலை ஆய்வு மையம்.
(B) புது தில்லியில் உள்ள உலக வானிலை மண்டலச் சிறப்பு வானிலை ஆய்வு மையம்.
(C) கொல்கத்தா வானிலை மண்டலச் சிறப்பு வானிலை ஆய்வு மையம்.
(D) ஹைதராபாத் வானிலை மண்டலச் சிறப்பு வானிலை ஆய்வு மையம்.
(E) விடை தெரியவில்லை

18. காற்று மாசுபடுவதால் குழந்தைகளின் மூளை வளர்ச்சி குறைவதாக எந்த நிறுவனம் கூறுகிறது
   (A) ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம்
   (B) மனித உரிமை ஆணையம்
   (C) ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையம்
   (D) ஐக்கிய நாடுகளின் முதலீட்டு வளர்ச்சி நிதியம்
   (E) விடை தெரியவில்லை

19. சரியான கூற்றை தேர்க
   1. ஒவ்வோர் ஆண்டும் ஜீன் 15 ஐ உலகக்காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
   2. காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.
   3. காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல் கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்.
   (A) செய்தி 1 சரி
   (B) செய்தி 1, 2 சரி
   (C) செய்தி 3 சரி
   (D) செய்தி 1, 3 சரி
   (E) விடை தெரியவில்லை

20. 'நளிஇரு முந்நீர் நாவாய் ஓட்டி
   வளிதொழில் ஆண்ட உரவோன் மருக' என்ற புறநானூற்றுப் பாடலில் வெண்ணிக்குயத்தியார் எம்மன்னைப் புகழ்ந்து பாடியுள்ளார்?
   (A) நெடுஞ்செழியன்
   (B) கரிகால் பெருவளத்தான்
   (C) தொண்டைமான் இளந்திரையன்
   (D) பெருஞ்சேரல் இரும்பொறை
   (E) விடை தெரியவில்லை

21. எந்த தமிழ்ச் சங்கம் 'வாழையிலை விருந்து விழா' வை ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றது?
   (A) அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச்சங்கம்
   (B) இலங்கை மினசோட்டா தமிழ்ச்சங்கம்
   (C) சிங்கப்பூர் மினசோட்டா தமிழிச்சங்கம்
   (D) மலேசியா மினசோட்டா தமிழ்ச்சங்கம்
   (E) விடை தெரியவில்லை

22. கொடுங்கோள் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர்” — என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல்?
(A) குறிஞ்சிப்பாட்டு
(B) மதுரைக்காஞ்சி
(C) முல்லைப்பாட்டு
(D) பட்டினப்பாலை
(E) விடை தெரியவில்லை

23. கீழ்க்கண்ட கூற்றை கவனி
கூற்று 1 : தொகைநிலைத் தொடர் ஆறு வகைப்படும்.
கூற்று 2 : காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை எனப்படும்.
(A) கூற்று 1 மற்றும் 2 சரி
(B) கூற்று 1 மற்றும் 2 தவறு
(C) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
(D) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
(E) விடை தெரியவில்லை

24. கீழ்க்கண்ட கூற்றை கவனி
கூற்று 1 : ஒற்றளபெடையில் 11 எழுத்துகள் அளபெடுக்கும்.
கூற்று 2 : ஒற்றளபெடையில் ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள், ஃ போன்ற எழுத்துகள் அளபெடுக்கும்.
(A) கூற்று 1 மற்றும் 2 சரி
(B) கூற்று 1 மற்றும் 2 தவறு
(C) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
(D) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
(E) விடை தெரியவில்லை

25. கீழ்க்கண்ட கூற்றை கவனி
கூற்று 1 : எடுத்துக்காட்டு உவமை அணியை உரைநடையில் பயன்படுத்துவதை இணை ஒப்பு என்கிறோம்
கூற்று 2: ‘புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை வாய்மையால் காணப்படும்’ என்ற குறளில் எடுத்துக்காட்டு உவமை உணி பயின்று வந்துள்ளது.
(A) கூற்று 1 மற்றும் 2 சரி
(B) கூற்று 1 மற்றும் 2 தவறு
(C) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
(D) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
(E) விடை தெரியவில்லை

26. தேனிலும் இனியநற் செந்தமிழ் மொழியே
தென்னாடு வளங்குறத் திகழுந்தென் மொழியே' என்ற பாடலின் ஆசிரியர் யார்?
(A) சுந்தர கவிராசர்
(B) கழனியூரன்
(C) கா.நமச்சிவாயர்
(D) நாஞ்சில் நாடன்
(E) விடை தெரியவில்லை

27. இரட்டுறமொழிதல் பாடலில் சங்கத்தவர் காக்க என்பது கடலுக்கு எவ்வாறு ஒப்புமைப்படுத்தப்படுகிறது?
(A) நீரலையைத் தடுத்து நிறுத்தி சங்கினைக் காத்தல்
(B) மூன்று வகையான சங்குள் தருதல்
(C) முத்தினை அமிழ்ந்து எடுத்தல்
(D) மிகுதியான வணிகப் கப்பல்கள்
(E) விடை தெரியவில்லை

28. கீழ்க்கண்ட கூற்றுகளில் சொல் என்பதற்கு சரியானவை எது
(A) இரு திணைகளையும் ஐந்து பால்களையும் குறிக்கும், மூவகை இடங்களிலும் வரும்
(B) உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வரும்
(C) வெளிப்படையாகவும் குறிப்பாகவும் விளங்கும்
(D) மேற்கூறிய அனைத்தும்
(E) விடை தெரியவில்லை

29. "மோப்பக் குழையும் அனிச்சம்" என்ற பாடல் அடி உணர்த்துவது
(A) முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்றல்
(B) முகசூழ்ச்சியோடு விருந்தினரை வரவேற்றல்
(C) விருந்தினரை வரவேற்றல்
(D) மேற்கண்ட அனைத்தும்
(E) விடை தெரியவில்லை

30. தவறான பொருத்தம் எது
(A) திருக்குறள் தெளிவுரை – வ.உ.சிதம்பரனார்
(B) சிறுவர் நாடோடிக் கதைகள் – கி.ராஜநாராயணன்
(C) ஆறாம் திணை – மருத்தவர் கு.சிவராமன்
(D) லிங்கபுரணம் – கி.ராஜநாராயணன்
(E) விடை தெரியவில்லை

31. மாறி உள்ள அடிகளில் சரியானது எது
   (A) உள்ளளவும் உப்பிட்டபவரை திணை
   (B) உப்பிட்டவரை உள்ளளவும் திணை
   (C) உள்ளளவும் உப்பிட்டபவரை நினை
   (D) உப்பிட்டவரை உள்ளளவும் நினை
   (E) விடை தெரியவில்லை

32. நாள்தோறும் நாடி முறைசெய்யா --------
   நாள்தோறும் நாடு கெடும் – இக்குறட்பாவில் கோடிட்ட இடத்தில் வரும் சரியான வாக்கியம்
   (A) வேந்தன்
   (B) மன்னவன்
   (C) பகைவன்
   (D) (A) மற்றும் (B)
   (E) விடை தெரியவில்லை

33. காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
   நாமம் கெடக்கெடும் நோய் – இக்குறட்பாவில்
   வெகுளி என்பதன் பொருள்
   (A) ஆசை
   (B) சினம்
   (C) அறியாமை
   (D) மேற்கண்ட அனைத்தும்
   (E) விடை தெரியவில்லை

34. “நச்சப்படாதவன்” என்பதன் பொருள் என்ன
   (A) பிறருக்கு உதவி செய்பவன்
   (B) பிறர் உதவியால் வாழ்பவன்
   (C) பிறருக்கு உதவி செய்யாதவன்
   (D) பிறர் உதவியை ஏற்க மறுப்பவன்
   (E) விடை தெரியவில்லை

35. பொருத்துக.
   a. தண்டு - 1. கீரை, வாழை
   b. கோல் - 2. நெட்டி, மிளகாய்ச் செடி
   c. தூறு - 3. குத்துச் செடி, புதர்
   d. தட்டு (அ) தட்டை - 4. கம்பு, சோளம்
   (A) 2 1 4 3
   (B) 1 2 3 4
   (C) 4 3 2 1
   (D) 3 4 2 1
   (E) விடை தெரியவில்லை

36. பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்களைக் கொண்டு பொருத்துக.

a. அரும்பு - 1. பூ மலர்ந்த நிலை
b. போது - 2. செடியினின்று பூ கீழே விழுதல்
c. மலர் - 3. பூ வாடின நிலை
d. வீ - 4. பூவின் தோற்ற நிலை
e. செம்மல் - 5. பூ விரியத் தொடங்குதல்

(A) 4 1 5 2 3
(B) 1 2 3 4 5
(C) 4 5 1 2 3
(D) 3 4 5 2 1
(E) விடை தெரியவில்லை

37. தாவரத்தின் பிஞ்சுகளுக்கு வழங்கும் சொற்களைக் கொண்டு பொருத்துக.

a. தென்னை, பனை - 1. முட்டுக்குரும்பை
b. சிறு குரும்பை - 2. குரும்பை
c. முற்றாத தேங்காய் - 3. கருக்கல்
d. இளம் பாக்கு - 4. இளநீர்
e. இளம் நெல் - 5. கச்சல்
f. வாழைப்பிஞ்சு - 6. நுழாய்

(A) 2 1 4 6 3 5
(B) 1 2 3 4 5 6
(C) 3 4 5 1 2 6
(D) 6 5 2 3 4 1
(E) விடை தெரியவில்லை

38. தாவரத்தின் இளம் பருவத்திற்கான சொற்களைக் கொண்டு பொருத்துக.

a. நாற்று – 1. தென்னை
b. கன்று – 2. வாழை
c. குருத்து – 3. நெல், கத்தரி
d. பிள்ளை – 4. மா, புளி, வாழை

(A) 1 2 3 4
(B) 3 2 4 1
(C) 4 3 2 1
(D) 3 4 2 1
(E) விடை தெரியவில்லை

39. எத்தனை இணைகள் சரி
    1. ஆரி - அருமை
    2. தமர் - உறவினர்
    3. தார் - குவியல்
    4. கிழி - துணி

(A) 1 இணை
(B) 2 இணை
(C) 3 இணை
(D) 4 இணை
(E) விடை தெரியவில்லை

40. திருவள்ளுவர் பெயரில் முதல் தமிழ் கணினி எந்த நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.

(A) ஏ.சி.இ டேட்டா புரொடக்ஸ்
(B) டி.சி.இ டேட்டா புரொடக்டஸ்
(C) டி.சி.டிம். டேட்டா புரொடக்டஸ்
(D) ஏ.சி.எம். டேட்டா புரொடக்டஸ்
(E) விடை தெரியவில்லை

41. திருப்பரங்குன்றத்தின் அழகைப் பார்ப்பதற்கென்றே இயற்கை பதித்து வைத்த இரண்டு பெரிய நிலைக்கண்ணாடிகளைப் போல் வடபுறமும் தென்புறமும் நீர்நிறைந்த கண்மாய்கள் என்ற உவமைக் காணப்படும் நூல்

(A) குறிஞ்சி மலர்
(B) மழையும் புயலும்
(C) தமிழின்பம்
(D) ரிஷிமூலம்
(E) விடை தெரியவில்லை

42. களம்புக துடித்து நின்ற உனக்கு, வெற்றிச்சாறு கிடைத்துவிட்டது உண்டு மகிழ்ந்தாய்: உன் புன்னகை தான் அதற்குச் சான்று என்று - கூறியவர் யார்.

(A) பாரதிதாசன்
(B) பாரதியார்
(C) அம்பேத்கர்
(D) அண்ணா
(E) விடை தெரியவில்லை

43. ஞாயிறு, திங்கள், நெஞ்சம் போன்ற அஃறிணைப் பொருள்கள், சொல்லுந போலவும், கேட்குந போலவும் சொல்லியாங்கு அமையும் - என்று எழுதும் திறத்தை குறிப்பிட்டவர்

(A) தொல்காப்பியர்

(B) அகத்தியர்

(C) கம்பர்

(D) நக்கீரர்

(E) விடை தெரியவில்லை

44. சொல்லும் முறையில் அழுத்தம் கொடுப்பதற்காக எதிரும் புதிருமான முரண்படும் கருத்துக்களை கூறுவதற்கு என்ன பெயர்

(A) சொல் இசைவு

(B) எதிரிணை இசைவு

(C) பொருள் இசைவு

(D) அணி இசைவு

(E) விடை தெரியவில்லை

45. வாழையும் கமுகும் தாழ்குலைத் தெங்கும்
மாவும் பலாவும் சூழ்அடுத்து ஓங்கி — என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது.

(A) சிலப்பதிகாரம்

(B) மணிமேகலை

(C) சீவகசிந்தாமணி

(D) வளையாபதி

(E) விடை தெரியவில்லை

46. காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள். இதில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது

(A) இலையும் சருகும்

(B) தோகையும் சண்டும்

(C) தாளும் ஓலையும்

(D) சருகும் சண்டும்

(E) விடை தெரியவில்லை

47. தேனிலே ஊறிய செந்தமிழின் - சுவை
தேறும் சிலப்பதி காரமதை
என்ற பாடலின் ஆசிரியர் யார்
(A) முடியரசன்
(B) கவிமணி தேசிய விநாயகனார்
(C) பிச்சமூர்த்தி
(D) பாரதியார்
(E) விடை தெரியவில்லை

48. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. Vowel | – | 1. கலந்துரையாடல் |
| b. Consonant | – | 2. ஒரு மொழி |
| c. Homograph | – | 3. மெய்யெழுத்து |
| d. Monolingual | – | 4. ஒப்பெழுத்து |
| e. Conversation | – | 5. உயிரெழுத்து |
| f. Discussion | – | 6. உரையாடல் |

(A) 5 3 4 2 6 1
(B) 1 2 3 4 5 6
(C) 6 5 4 3 2 1
(D) 3 4 5 2 6 1
(E) விடை தெரியவில்லை

49. காற்று பருவநிலை சூழல், வீசும் வேகம் ஆகியவற்றிற்கேற்ப எந்தெந்த பெயர்களில் அழைக்கப்படுகிறது.
(A) தென்றல், காற்று, பூங்காற்று, கடல்காற்று, பனிக்காற்று
(B) வாடைக்காற்று, மேல்காற்று, கீழ்காற்று, ஆடிக்காற்று
(C) கடுங்காற்று, பேய்க்காற்று, சூறாவளிக்காற்று
(D) மேற்கூறிய அனைத்தும்
(E) விடை தெரியவில்லை

50. நந்தமிழும் தண்பொருநை நன்னதியும் சேர் பொருப்பிற்
செந்தமிழின் பின்னுதித்த தென்றலே – என்ற பாடலை இயற்றியவர் யார்
(A) பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்
(B) மாணிக்கவாசகர்
(C) திருமூலர்
(D) சுந்தரர்
(E) விடை தெரியவில்லை

51. நளிஇரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக
களிஇயல் யானைக் கரிகால் வளவ – என்ற பாடல் வரி இடம்பெற்ற நூல் எது.
(A) நற்றிணை
(B) அகநானூறு
(C) புறநானூறு
(D) சிலப்பதிகாரம்
(E) விடை தெரியவில்லை

52. கி.பி. முதல் நூற்றாண்டில் பருவக் காற்றின் உதவியினால் நடுக்கடல் வழியாக முசிறித் துறைமுகத்திற்கு நேரே விரைவில் பயணம் செய்யும் புதிய வழியைக் கண்டுபிடித்தவர் யார்.
(A) கிரேக்க மாலுமி ஹிப்பாலஸ்
(B) கிரேக்க மாலுமி தாலமி
(C) உரோம மாலுமி அரிஸ்டாட்டில்
(D) எகிப்திய மாலுமி அலெக்ஸாண்டர்
(E) விடை தெரியவில்லை

53. கடுங்காற்று மணலைக் கொண்டு வந்து சேரக்கிறது – என்று காற்றின் வேகத்தைப் பற்றி புறநானூற்றில் குறிப்பிட்டவர் யார்.
(A) மதுரை இளநாகனார்
(B) நக்கண்ணகனார்
(C) பெருவழுதி
(D) நக்கீரர்
(E) விடை தெரியவில்லை

54. காற்றி மாசுபடுவதால் குழந்தைகளின் மூளை வளர்ச்சி குறைவதாக எந்த நிறுவனம் கூறுகிறது.
(A) ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம்
(B) ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையம்
(C) ஐக்கிய நாடுகளின் சுகாதார அமைப்பு
(D) ஐக்கிய நாடுகளின் முதலீட்டு வளர்ச்சி நிதியம்
(E) விடை தெரியவில்லை

55. தொடரில் விடுபட்ட இடத்தில் சரியாக பொருந்தும் வார்த்தையை தேர்ந்தெடு.
 1. வெயிலில் அலையாதே உடல் ---------- விடும்.
 2. வானம் ------ தொடங்கியது. மழைவரும் போலிருக்கிறது.
 (A) கருக்க, கறுத்து
 (B) பாதிக்கும், இருள
 (C) கறுத்து, கருக்க
 (D) சோர்வு, கருக்க
 (E) விடை தெரியவில்லை

56. கீழ்க்கண்ட கூற்றை கவனி
 கூற்று 1 - உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்றவர் தொல்காப்பியர்.
 கூற்று 2 - காற்றானது கிழக்கிலிருந்து வீசும்போது கொண்டல் என அழைக்கப்படுகிறது.
 (A) கூற்று 1, 2 சரி
 (B) கூற்று 1, 2 தவறு
 (C) கூற்று 1 சரி 2 தவறு
 (D) கூற்று 1 தவறு 2 சரி
 (E) விடை தெரியவில்லை

57. கீழ்க்கண்ட கூற்றை கவனி
 கூற்று 1 – தென்மேற்குப் பருவக்காற்றானது அக்டோபர் முதல் டிசம்பர் வரை வீசுகின்றது.
 கூற்று 2 – வடகிழக்கு பருவக்காற்றானது ஜீன் முதல் செப்டம்பர் வரை வீசுகின்றது
 (A) கூற்று 1 2 சரி
 (B) கூற்று 1 2 தவறு
 (C) கூற்று 1 சரி 2 தவறு
 (D) கூற்று 1 தவறு 2 சரி
 (E) விடை தெரியவில்லை

58. காற்றே, வா மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு, மனத்தை மயலுறுத்துகின்ற இனிய வாசனையுடன் வா – என்ற பாடலை பாடியவர் யார்.
 (A) பாரதியார்
 (B) பாரதிதாசன்
 (C) கண்ணதாசன்
 (D) முடியரசன்
 (E) விடை தெரியவில்லை

59. பொருத்துக.

a. மயலுறுத்து - 1. உயிர்வளி

b. ப்ராண ரஸம் - 2. சீராக

c. லயத்துடன் - 3. மயங்கச்செய்

d. அருகுற - 4. அருகில்

(A) 1 2 3 4

(B) 4 3 2 1

(C) 3 4 2 1

(D) 3 1 2 4

(E) விடை தெரியவில்லை

60. பொருத்துக.

a. நனந்தலை உலகம் - 1. விரைவாகச் செல்லுதல்

b. நேமி - 2. மலை

c. கோடு - 3. அகன்ற உலகம்

d. கொடுஞ்செலவு - 4. வலம்புரிச்சங்கு

(A) 1 2 3 4

(B) 3 2 4 1

(C) 4 3 2 1

(D) 3 4 2 1

(E) விடை தெரியவில்லை

61. பொருத்துக.

a. நறுவீ - 1. தோள்

b. தூஉய் - 2. நற்சொல்

c. விரிச்சி - 3. நறுமணமுடைய மலர்கள்

d. சுவல் - 4. தூவி

(A) 1 2 3 4

(B) 3 2 4 1

(C) 4 3 2 1

(D) 3 4 2 1

(E) விடை தெரியவில்லை

62. பொருத்துக.

a. மூதூர் - 1. பண்புத்தொகை
b. உறுதுயர் - 2. வினைத்தொகை
c. கைதொழுது - 3. மூன்றாம் வேற்றுமைத்தொகை
d. தடக்கை - 4. உரிச்சொல்தொடர்

(A) 1 2 3 4
(B) 3 2 4 1
(C) 4 3 2 1
(D) 3 4 2 1
(E) விடை தெரியவில்லை

63. முல்லை நிலத்தின் உரிபொருள் என்ன.
(A) புணர்தலும் புணர்தல் நிமித்தமும்
(B) இருந்தலும் இருத்தல் நிமித்தமும்
(C) ஊடலும் ஊடல் நிமித்தமும்
(D) இரங்கலும் இரங்கல் நிமித்தமும்
(E) விடை தெரியவில்லை

64. புயலின் பெயர்களை எந்தெந்த நாடு வழங்கியுள்ளது.
(A) வங்கதேசம், இந்தியா
(B) மியான்மர், ஓமன், பாகிஸ்தான்
(C) இலங்கை, தாய்லாந்து
(D) மேற்கூறிய அனைத்தும்
(E) விடை தெரியவில்லை

65. பெயர்சொல்லோடு வினைச்சொல்லும் பெயர்ச்சொல்லும் சேரும் தொடரின் இடையில், வேற்றுமை உருபுகளோ, வினை, பண்பு முதலியவற்றின் உருபுகளோ தொக்கி வருவதை -- என்று கூறுவர்.
(A) தொகைநிலைத்தொடர்
(B) தொகாநிலைத்தொடர்
(C) வேற்றுமைத்தொடர்
(D) எதுவுமில்லை
(E) விடை தெரியவில்லை

66. தமிழ்த்தொண்டு - இலக்கணக்குறிப்பு தருக.
(A) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
(B) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
(C) ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
(D) ஆறாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
(E) விடை தெரியவில்லை

67. சிறப்புப் பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் நின்று இடையில் ஆகிய என்னும் பண்பு உருபு தொக்கி வருவது ---- எனப்படும்.
   (A) இருபெயரொட்டுப் பண்புத்தொகை
   (B) உம்மைத்தொகை
   (C) உவமைத்தொகை
   (D) அன்மொழித்தொகை
   (E) விடை தெரியவில்லை

68. உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
   உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம் - பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை.
   (A) உருவகம், எதுகை
   (B) மோனை, எதுகை
   (C) முரண், இயைபு
   (D) உவமை, எதுகை
   (E) விடை தெரியவில்லை

69. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. கொண்டல் | - | 1. மேற்கு |
| b. கோடை | - | 2. தெற்கு |
| c. வாடை | - | 3. கிழக்கு |
| d. தென்றல் | - | 4. வடக்கு |

   (A) 1 2 3 4
   (B) 3 1 4 2
   (C) 4 3 2 1
   (D) 3 4 1 2
   (E) விடை தெரியவில்லை

70. அந்த இடம் காற்றே வா உன்னைப் பாடாமல் இருக்க முடியாது என்று எழுதியவர் யார்.
   (A) கண்ணதாசன்
   (B) வாணிதாசன்
   (C) அப்துல் ரகுமான்
   (D) பாரதியார்
   (E) விடை தெரியவில்லை

71. அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்தும் புறத்தே காட்சி படாமல் உள்ளேயே இருக்கும் மலர்கள் எது.
(A) அத்தி, ஆலம்
(B) கொழிஞ்சி
(C) பலா
(D) அனைத்தும் சரி
(E) விடை தெரியவில்லை

72. பயன்பாடு, நாற்றம் மற்றும் மக்கள் விரும்பாத மலர்கள் என்ன?
(A) நெருஞ்சி, எருக்கு, பூளை
(B) வேளை, ஊமத்தம்
(C) கள்ளி, முருங்கை
(D) அனைத்தும் சரி
(E) விடை தெரியவில்லை

73. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. Tempest | – | 1. பெருங்காற்று |
| b. Land Breeze | – | 2. நிலக்காற்று |
| c. Sea Breeze | – | 3. கடற்காற்று |
| d. Whirl Wind | – | 4. சுழல்காற்று |

(A) 4 3 2 1
(B) 2 1 4 3
(C) 1 2 3 4
(D) 1 4 3 2
(E) விடை தெரியவில்லை

74. தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை – என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது.
(A) மணிமேகலை
(B) சிலப்பதிகாரம்
(C) சீவகசிந்தாமணி
(D) வளையாபதி
(E) விடை தெரியவில்லை

75. விருந்தினரும் வறியவரும் நெருங்கியுண்ண மேன்மேலும்
முகமலரும் மேலோர் போல – என்ற பாடல்வரி இடம்பெற்ற நூல் எது.
(A) மணிமேகலை
(B) சிலப்பதிகாரம்
(C) சீவகசிந்தாமணி
(D) கலிங்கத்துப்பரணி
(E) விடை தெரியவில்லை

76. உண்டால் அம்ம, இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும், இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே – என்ற புறநானூறு பாடலை பாடியவர் யார்.
(A) கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி
(B) பெருங்கௌசிகனார்
(C) நக்கண்ணகனார்
(D) நப்பூதனார்
(E) விடை தெரியவில்லை

77. தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குத்தியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி என்று கூறும் நூல் எது.
(A) நற்றிணை
(B) அகநானூறு
(C) புறநானூறு
(D) குறுந்தொகை
(E) விடை தெரியவில்லை

78. நெய்தல் நிலத்தில் பாணர்களை வரவேற்று குழல் மீன் கறி பிறிவும் கொடுத்ததாக கூறும் நூல் எது.
(A) சிறுபாணாற்றுப்படை
(B) குறுந்தொகை
(C) நற்றிணை
(D) அகநானூறு
(E) விடை தெரியவில்லை

79. இலையை மடிப்பதற்கு முந்தைய வினாடிக்கு முன்பாக மறுக்க மறுக்க பரிமாற்றப்பட்ட கூடுதல் இட்லியில் நீண்டு கொண்டிருந்தது பிரியங்களின் நீள் சரடு – என்ற கவிதையை இயற்றியவர் யார்.
   (A) மாயாவதி
   (B) அம்சப்பிரியா
   (C) கலைவாணி
   (D) ஜெயவதி
   (E) விடை தெரியவில்லை

80. இல்லத்தில் பலரும் நுழையும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர் உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா? என்று கேட்கும் வழக்கம் இருந்ததாக கூறும் நூல் எது?
   (A) நற்றிணை
   (B) அகநானூறு
   (C) புறநானூறு
   (D) குறுந்தொகை
   (E) விடை தெரியவில்லை

81. பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
   வருவீர் உளீரோ – என்ற பாடல்வரி இடம்பெற்ற நூல் எது.
   (A) நற்றிணை
   (B) அகநானூறு
   (C) புறநானூறு
   (D) குறுந்தொகை
   (E) விடை தெரியவில்லை

82. வரகரிசிச் சோறும் வழுதுணைங்காய் வாட்டும்
   முரமுரெனவே புளித்த மோரும் - திறமுடனே என்று பாடியவர் யார்.
   (A) பெருங்கௌசிகனார்
   (B) காக்கை பாடினியார்
   (C) ஔவையார்
   (D) அம்மூவனார்
   (E) விடை தெரியவில்லை

83. விருந்தினரை வழியனுப்பும் பொழுது அவர்கள் செல்லவிருக்கிற நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேவர்வரை ஏழு அடி நடந்து சென்று வழியனுப்பினர் என்று கூறும் நூல் எது.
(A) பொருநராற்றுப்படை
(B) திருக்குறள்
(C) சிறுபாணாற்றுப்படை
(D) அகநானூறு
(E) விடை தெரியவில்லை

84. "முகமன்" என்ற சொல்லின் பொருள் ----
(A) அருகில்
(B) ஒருவரை நலம் வினவிக் கூறும் விருந்தோம்பல்
(C) தொலைவில்
(D) அண்மையில்
(E) விடை தெரியவில்லை

85. ஒப்புடன் முகம் மலர்ந்தே உபசரித்து உண்மை பேசி உப்பிலாக் கூழ் இட்டாலும் - என்ற பாடல்வரி இடம் பெற்ற நூல் எது.
(A) கௌசிகனார்
(B) விவேக சிந்தாமணி
(C) நக்கண்ணகனார்
(D) பாண்டியர்
(E) விடை தெரியவில்லை

86. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| a. | அசைஇ | - 1. | தினை |
| b. | கடும்பு | - 2. | கூத்தர் |
| c. | ஆரி | - 3. | அருமை |
| d. | வயிரியம் | - 4. | சுற்றம் |
| e. | இறடி | - 5. | இளைப்பாறி |

(A) 5 4 3 2 1
(B) 4 5 3 2 1
(C) 1 2 3 4 5
(D) 4 5 2 3 1
(E) விடை தெரியவில்லை

87. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. அல்கி | - | 1. வெந்தது |
| b. நரலும் | - | 2. பள்ளம் |
| c. படுகர் | - | 3. தங்கி |
| d. வேவை | - | 4. சோறு |
| e. பொம்மல் | - | 5. ஒலிக்கும் |

(A) 3 4 2 1 5
(B) 1 2 3 4 5
(C) 3 5 2 1 4
(D) 5 4 3 2 1
(E) விடை தெரியவில்லை

88. அசைஇ, கெழீஇ - என்பதன் இலக்கணக் குறிப்பு தருக.
(A) இன்னிசை அளபெடை
(B) வினைத்தொகை
(C) சொல்லிசை அளபெடை
(D) செய்யுளிடை அளபெடை
(E) விடை தெரியவில்லை

89. மலையை யானையாக உருவகம் செய்து மலையில் பலவகை ஓசைகளை அதன் மதம் என்று விளக்குவதால் ----- எனப் பெயர் பெற்றது.
(A) மலைபடுகடாம்
(B) திருமுருகாற்றுப்படை
(C) நெடுநல்வாடை
(D) புரிபாடல்
(E) விடை தெரியவில்லை

90. அறிஞருக்குப் பொன்னாடை – என்பது எவ்வகைத்தொடர்
(A) மூன்றாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்
(B) இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்
(C) நான்காம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்
(D) ஏழாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்
(E) விடை தெரியவில்லை

91. காசிக்கண்டம் என்பது ----
(A) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்
(B) காசி நகரத்தின் குறிக்கும் மறுபெயர்
(C) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்
(D) காசி நகரத்தின் வழிப்படுத்தும் நூல்
(E) விடை தெரியவில்லை

92. விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை
(A) நிலத்திற்கேற்ப விருந்து
(B) இன்மையிலும் விருந்து
(C) அல்லிலும் விருந்து
(D) உற்றாரின் விருந்து
(E) விடை தெரியவில்லை

93. சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை எனக்கூறும் நூல் எது.
(A) திருக்குறள்
(B) புறநானூறு
(C) நற்றிணை
(D) அகநானூறு
(E) விடை தெரியவில்லை

94. கத்துகடல் சூழ்நாளைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போது அரிசிவரும் - குத்தி என்ற பாடலை பாடியவர் யார்.
(A) நக்கண்ணகனார்
(B) காளமேகப்புலவர்
(C) பெருவழுதி
(D) இளஞ்செழியன்
(E) விடை தெரியவில்லை

95. கலைச்சொல்லைக் கொண்டு பொருத்துக.
a. செவ்விலக்கியம் - 1. Classical Literature
b. காப்பிய இலக்கியம் - 2. Epic Literature
c. பக்தி இலக்கியம் - 3. Devotional Literature
d. பண்டை இலக்கியம் - 4. Ancient Literature
e. வட்டார இலக்கியம் - 5. Regional Literature
f. நாட்டுப்புற இலக்கியம் - 6. Folk Literature
g. நவீன இலக்கியம் - 7. Modern Literature
(A) 1 2 3 4 5 6 7
(B) 2 1 4 3 5 6 7
(C) 7 6 5 4 3 2 1
(D) 2 3 4 5 6 7 1
(E) விடை தெரியவில்லை

96. சாகும்போது தமிழ்படித்துச் சாகவேண்டும் - என்றன்

சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்

என்று தமிழ்மொழியைப் போற்றி வணங்கியவர்

(A) மறைமலைஅடிகள்

(B) வீரமாமுனிவர்

(C) பரிதிமாற்கலைஞர்

(D) க.சச்சிதானந்தன்

(E) விடை தெரியவில்லை

97. பொருத்துக.

a. தூறு - 1. நெல், கேழ்வரகு

b. தாள் - 2. கீரை, வாழை

c. கோல் - 3. நெட்டி, மிளகாய்ச்செடி

d. தண்டு - 4. குத்துச்செடி, புதர்

(A) 4 3 2 1

(B) 3 2 4 1

(C) 3 1 4 2

(D) 4 1 3 2

(E) விடை தெரியவில்லை

98. சரியற்றதைத் தேர்ந்தெடு

(A) பிள்ளை – தென்னையின் இலை

(B) குட்டி – விளாவின் இளநிலை

(C) மடலி (அ) வடலி – பனையின் இளநிலை

(D) குருத்து – பலாவின் இளநிலை

(E) விடை தெரியவில்லை

99. தாய்லாந்து மன்னரின் முடிசூட்டுவிழாவில் எந்த நூல்களின் பாடல்களை அவர்களது தாய்மொழியில் எழுதி வைத்துப் பாடுகின்றனர் என தனிநாயகம் அடிகள் கூறுகிறார்.

(A) திருவாசகம், திருமந்திரம்

(B) திருவெம்பாவை, திருப்பாவை

(C) திருக்கோவை, திருவிளையாடற்புராணம்

(D) திருமந்திரம், பெரியபுராணம்

(E) விடை தெரியவில்லை

100. எந்த நூற்றாண்டு சூழலில் தான் கம்பரின் இராமாயணம் இலக்கியம் எனத் தகுதி பெற்றதோடு ஆய்வுக்குரிய பெருநூலாகவும் கருதப்படுகிறது.

(A) பத்தொன்பதாம் நூற்றாண்டு

(B) இருபதாம் நூற்றாண்டு

(C) இருபத்தொறாம் நூற்றாண்டு

(D) பதினெட்டாம் நூற்றாண்டு

(E) விடை தெரியவில்லை

******

மனிதநேயம் வளர்ப்போம் மானுடம் மீட்போம் சைதை சா. துரைசாமியின் மனித நேய அறக்கட்டளை